S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன்
ஜீவல்லரி மார்ட் A/C
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ,
ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 324 | 17.05.2026 | SUNDAY | VAIKASI : 3 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 324 | 17.05.2026 | ஞாயிற்றுக்கிழமை | வைகாசி : 3 | விலை : ரூ.5/–

## வெளிநாட்டுப் பயணங்களுக்கு கூடுதல் வரி விதிப்பா?

# "பிரதமர் மோடி மறுப்பு!"

புது டெல்லி: மே.17-

வெளிநாட்டுப் பயணங்களுக்கு வரி அல்லது கூடுதல் கட்டணம் விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாக வெளியான ஊடக செய்தி முற்றிலும் பொய்யானது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பயணங்களுக்கு வரி, செஸ் அல்லது கூடுதல் கட்டணம் விதிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருவதாகவும், ஆனால் இறுதி முடிவு எதுவும் இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் ஊடக நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டது.

இதற்கு மறுப்பு தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இந்த செய்தி முற்றிலும் பொய்யானது. இதில் ஒரு துளிகூட உண்மை இல்லை. வெளிநாட்டுப் பயணங்களுக்கு இதுபோன்ற கட்டுப்பாடுகளை விதிக்கும் கேள்விக்கே இடமில்லை. நமது மக்கள் வணிகம் மேற்கொள்வதை எளிதாக்குவதையும், வாழ்வதை எளிதாக்குவதையும் மேம்படுத்துவதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்" என்று தெரிவித்துள்ளார். ஒரு ஊடகச் செய்தியை பிரதமரே மறுப்பது அரிதான நிகழ்வாகும்.



தொடர்ந்து நடைபெற்று வரும் மேற்காசிய மோதலின் காரணமாக, பொருளாதாரத்தை வலுப்படுத்த எரிபொருளை சிக்கனமாகப் பயன்படுத்துதல் மற்றும் தங்கம் வாங்குவதை ஒத்திவைத்தல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளுக்கு பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு விடுத்திருந்தார். இதனை தொடர்ந்து தங்கம் மீதான இறக்குமதி வரி சில நாட்களுக்கு முன்பு உயர்த்தப்பட்டது. மேலும், பெட்ரோல், டீசல் விலையும் லிட்டருக்கு ரூ.3 என வெள்ளிக்கிழமை அன்று உயர்த்தப்பட்டது.





## பிஎம்ஸ்ரீ திட்டத்தை தவெக அரசு நிராகரிக்க முதல்வர் விஜய்க்கு இந்திய கம்யூ. வலியுறுத்தல்

சென்னை: மே.17-

'பிஎம்ஸ்ரீ திட்டத்தை தமிழக வெற்றிக் கழக அரசு உறுதியுடன் நிராகரிக்க வேண்டும்' என்று முதல்வர் விஜய்க்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "பாஜகவின் ஒன்றிய அரசு 'இந்துத்துவா' கருத்தியலையும், சமஸ்கிருதம், இந்தி மொழித் திணிப்பையும் உள்ளடக்கமாகக் கொண்ட பிஎம்ஸ்ரீ திட்டத்தை தமிழக அரசு ஆரம்ப நிலையில் இருந்தே எதிர்த்து வருகிறது.

இந்தத் திட்டத்தை ஏற்க வேண்டும் என நிர்பந்தித்து வரும் ஒன்றிய அரசு, தமிழக அரசு செயல்படுத்தி வரும் சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்துக்கு நிதியை வழங்க மறுத்துவிட்டது. மாநில அரசின் சொந்த நிதிப் பொறுப்பில் கல்வித் துறை பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில், ஒன்றிய அரசு கடந்த 7ம் தேதி பிஎம்ஸ்ரீ திட்டத்தை ஏற்று கையெழுத்து போட வேண்டும் என தமிழக அரசுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள தமிழக வெற்றிக் கழக அரசும் பிஎம்ஸ்ரீ திட்டத்தை உறுதியுடன் நிராகரிக்க வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம், தமிழ்நாடு முதல்வரை கேட்டுக் கொள்கிறது" என்று மு.வீரபாண்டியன் கூறியுள்ளார்.

## நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வலியுறுத்தி திக, திமுக, விசிக, இடதுசாரிகள் ஆர்ப்பாட்டம்

சென்னை: மே.17-

நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வலியுறுத்தி இன்று தமிழகம் முழுவதும் திராவிடர் கழகம், திமுக, விசிக, இடதுசாரிகள், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின.

நீட் தேர்வு முறையை ரத்து செய்ய வலியுறுத்தி இன்று மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்துக்கு திராவிடர் கழகம் அழைப்பு விடுத்திருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்துக்கு திமுக, விசிக, இடதுசாரிகள், மதிமுக உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்திருந்தன.

இன்று சென்னை எழும்பூரில் திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் விசிக தலைவர் தொல்.திருமாவளவன், திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் ஜி.செல்வா உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.




இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய திக தலைவர் கி.வீரமணி, "நீட் தேர்வில் மிகப் பெரிய ஊழல் நடக்கிறது. நீட் தேர்வை ஒழிக்காமல் ஊழலற்ற அரசு என பாஜக எப்படி சொல்ல முடியும். அரசியல் சட்டத்துக்கு மிகவும் விரோதமானதுதான் நீட் தேர்வு. நீட் தேர்வே ஒரு மோசடிதான், சட்ட விரோதம் தான். நீட் விவகாரத்தில் மாநில உரிமை பறிக்கப்பட்டுள்ளது. எனவே, நீட் தேர்வை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்" என்றார்.

விசிக தலைவர் திருமாவளவன், "நீட் தேர்வின் காரணமாக 12ம் வகுப்பு பொதுத் தேர்வுக்கு மதிப்பில்லாமல் ஆகிவிட்டது. இப்போது நீட் தேர்வுக்கு பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் அதிகமாகிவிட்டன. இதனால் நீட் தேர்வு வணிகமயமாக மாறிவிட்டது. நீட் தேர்வின் மூலம் எளிய மக்கள் மருத்துவ கல்வி பெற முடியாது. மருத்துவ படிப்புக்கு நீட் பயிற்சி நிறுவனங்களை நாடினால் போதும் என, வசதியுள்ளவர்களுக்கான படிப்பாக அதனை மாற்றி விட்டார்கள்.

நீட் தேர்வால் தனியார் மருத்துவ கல்வி நிறுவனங்களின் கொள்ளையை தடுக்க முடியவில்லை. நீட் தேர்வு அரசியலமைப்பு சட்டத்துக்கே எதிரானது. தமிழக அரசு நீட் தேர்வு வேண்டாம் என சட்ட மசோதாவை நிறைவேற்றிய பின்னரும் மத்திய அரசு ஏற்க மறுக்கிறது. இப்போது நீட் வினாத்தாள் கசிந்ததை மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஒப்புக்கொண்டுள்ளார்" என்று கூறினார்.

மதுரை, திண்டுக்கல், சேலம், தஞ்சாவூர், திண்டிவனம், விழுப்புரம் உள்பட தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் இன்று நீட் தேர்வுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம்: சுற்றுலா பயணிகள் செல்ல தடை

திண்டுக்கல்: மே.17-

கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பதால் சனிக்கிழமை (நேற்று) காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் பேரிஜம் ஏரி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ளது. இதனால் வனத்துறையினரிடம் அனுமதி பெற்றே சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியும். பேரிஜம் ஏரிக்கு செல்லும் வழியில் தொப்பி தூக்கிப் பாறை, மதிகெட்டான் சோலை, வியூ பாய்ண்ட், அமைதி பள்ளத்தாக்கு உள்ளிட்ட இடங்களை பார்க்கலாம்.



இந்நிலையில் (மே 16) காலை முதல் பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் அங்கு செல்வதற்கு சனிக்கிழமை (இன்று) காலை முதல் மறு அறிவிப்பு வரும் வரை வனத்துறை தடை விதித்துள்ளது. அதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

இது குறித்து வனத்துறையினர் கூறும் போது,புலிகள் நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். புலிகள் அடர்ந்த வனப்பகுதிக்குள் சென்றதும் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவர் என்றனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## விபத்தில் கணவர், மகளை பறிகொடுத்த பெண்ணுக்கு ரூ.1.60 கோடி இழப்பீடு: இன்சூரன்ஸ் நிறுவனம் வழங்க உத்தரவு

சென்னை: மே.17-

இருங்காட்டுக்கோட்டை சிப்காட் அருகே கார் மீது லாரி மோதி விபத்துக்கு உள்ளானதில் கணவர் மற்றும் மருத்துவரான மகளை பறிகொடுத்த பெண்ணுக்கு ரூ. 1.60 கோடியை இழப்பீடாக வழங்க தனியார் இன்சூரன்ஸ் நிறுவனத்துக்கு சென்னை மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.



சென்னை வில்லிவாக்கம் திருமலை நகர் பகுதியில் மருந்தகம் நடத்தி வந்தவர் பாஸ்கர் (61). இவரது மனைவி ஜோதிகா (49), சொந்தமாக பியூட்டி பார்லர் நடத்தி வருகிறார். மகள் ஷோபிகா (26), தனியார் மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வந்தார்.

மூவரும் குடும்பத்துடன் ஏலகிரி சென்று விட்டு கடந்த 2023 மே 14ம் தேதி சென்னைக்கு காரில் திரும்பிக் கொண்டிருந்தனர். காரை அஸ்வின்குமார் என்பவர் ஓட்டி வந்துள்ளார்.

அப்போது இரவு 9 மணியளவில் கார் பெங்களூரு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் இருங்காட்டுக்கோட்டை சிப்காட் அருகே வந்து கொண்டிருந்தபோது சிப்காட்டில் இருந்து அதிவேகமாக நெடுஞ்சாலையில் புகுந்த சரக்கு லாரி, கார் மீது மோதியது.

இதில் படுகாயமடைந்த பாஸ்கரும், அவரது மகள் ஷோபிகாவும் உயிரிழந்தனர். ஜோதிகாவும், கார் ஓட்டுநரும் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினர். இந்நிலையில் இளம் மருத்துவரான தனது மகள் மற்றும் கணவரின் இறப்புக்கும், தனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும் ரூ.3 கோடி இழப்பீடு கோரி சென்னை மோட்டார் வாகன விபத்து வழக்குகளுக்கான இழப்பீட்டு தீர்ப்பாயத்தில் ஜோதிகா தனித்தனியாக 3 வழக்குகளைத் தொடர்ந்தார்.

இந்த வழக்குகளை விசாரித்த சென்னை சிறு வழக்குகளுக்கான முதன்மை நீதிமன்ற நீதிபதி ஏ.நசீர் அகமது, 'இந்த விபத்து சரக்கு லாரி ஓட்டுநரின் கவனக் குறைவு, அலட்சியப் போக்கு மற்றும் அதிவேகத்தால் நிகழ்ந்துள்ளது.

உயிரிழந்த பெண் மருத்துவர் தனியார் மருத்துவமனையில் ரூ. 1.14 லட்சம் ஊதியம் வாங்கி வந்துள்ளார். மருந்தகம் நடத்தி வந்த பாஸ்கர் மாதம் ரூ. 50 ஆயிரம் சம்பாதித்துள்ளார். காயமடைந்த மனுதாரரான ஜோதிகாவும் தன் பங்குக்கு ரூ. 20 ஆயிரம் வரை சம்பாதித்து வந்துள்ளார்.

இந்த விபத்துக்கு கார் ஓட்டுநரின் அதிவேகமே காரணம் என்ற சரக்கு லாரி காப்பீடு செய்யப்பட்ட தனியார் இன்சூரன்ஸ் நிறுவனத்தின் வாதம் ஏற்புடையதல்ல. மனுதாரர் இந்த விபத்தில் தனது மகள் மற்றும் கணவரை பறிகொடுத்ததுடன் மட்டுமல்லாது அவரும் 34 சதவீதம் அளவுக்கு ஊனமடைந்துள்ளார்.

எனவே அவரது மகளின் இறப்புக்கு ரூ. 1 கோடியே 29 லட்சத்து 89 ஆயிரத்து 800, கணவரின் இறப்புக்கு ரூ. 17 லட்சத்து 24 ஆயிரம், மனுதாரருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கு ரூ. 13 லட்சத்து 58 ஆயிரத்து 300 என மொத்தம் ரூ. 1 கோடியே 60 லட்சத்து 72 ஆயிரத்து 100ஐ தனியார் இன்சூரன்ஸ் நிறுவனம் 7.5 சதவீத வட்டியுடன் வழங்க வேண்டும்' என உத்தரவிட்டுள்ளார்.



# தவெக எம்.எல்.ஏ அன்னை விஜி சரவணனைச் சந்தித்த சாத்தான்குளம் பட்டாளம்! நிர்வாகிகள் நேரில் வாழ்த்து

ஸ்ரீவைகுண்டம் மே,17-

ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதியில் தமிழக வெற்றி கழகம் (தவெக) சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள அன்னை விஜி சரவணன் எம்.எல்.ஏ அவர்களை, சாத்தான்குளம் நகர மற்றும் மாவட்ட நிர்வாகிகள் நேரில் சந்தித்துத் தங்களது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

*வாழ்த்துப் பட்டாளம்:*

சாத்தான்குளம் நகரச் செயலாளர் சக்திவேல், மாவட்ட வழக்கறிஞர் அணி மேற்கு மாவட்டச் செயலாளர் ஜெயதீபன், வழக்கறிஞர் அழகுராம், மற்றும் சாத்தான்குளம் சிவா உள்ளிட்ட தவெக முக்கிய நிர்வாகிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு எம்.எல்.ஏ வுக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துப் பெற்றனர். தொகுதி மக்களின் தேவைகளை அறிந்து, ஸ்ரீவைகுண்டம் தொகுதியை முன்மாதிரித் தொகுதியாக மாற்றத் தவெகவினர் அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபடுவோம் என இந்தச் சந்திப்பின் போது உறுதி ஏற்றுக்கொள்ளப்பட்டது.



# சோதனை காலத்தை கடந்து எடப்பாடியார் வழியில் நடப்போம்!" நிர்வாகிகளுக்கு திருப்பூர் சிவசாமி Ex.MP அறிவுரை

மடத்துக்குளம் மே,17-

அ இ அ தி மு க பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, திருப்பூர் புறநகர் மாவட்டக் கழகச் செயலாளராகப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள திருப்பூர் சிவசாமி Ex-.MP தலைமையில் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி அஇஅதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் முக்கிய நிர்வாகிகள் திரளாகக் கலந்துகொண்டனர். கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் திருப்பூர் சிவசாமி பேசுகையில்: "கழகத்தின் இந்தச் சோதனையான காலகட்டத்தில் அனைவரும் எடப்பாடியாரின் வழிகாட்டுதலின்படி ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், இனிவரும் காலங்களில் கழகத்திற்காக உழைக்கும் உண்மையான தொண்டர்களுக்கு மட்டுமே உரிய கழகப் பொறுப்புகள் வழங்கப்படும் என்றும், மீண்டும் எடப்பாடியார் தலைமையில் அஇஅதிமுக ஆட்சி அமைய அனைவரும் சூளுரைக்க வேண்டும் என்றும் அவர் உறுதியளித்துப் பேசினார்

# சட்டவிரோத மது விற்பனையை தடுக்க தவறியதாக திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் சஸ்பெண்ட்

சென்னை: மே,17-

திருவொற்றியூர் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு காவல் ஆய்வாளராக இருப்பவர் அலெக்ஸ். இவர் விடுப்பில் சென்றதால் அக்காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் மோகன்தாஸ், கூடுதல் பொறுப்பாகச் சட்டம் ஒழுங்கு பணிகளைக் கவனித்து வந்தார்.இந்தச் சூழலில் திருவொற்றியூர் பகுதியில் உள்ள டாஸ்மாக் கடை ஒன்றில் அனுமதிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னரும் (மதியம் 12 மணி), அனுமதிக்கப்பட்ட நேரத்தைத் தாண்டியும் (இரவு 10 மணி) சட்ட விரோதமாக மது விற்பனை நடைபெறுவதாகப் புகார்கள் எழுந்தன.




இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் அண்மையில் வைரலானது. சென்னையில் சட்டவிரோத மது விற்பனையை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என்று காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக் ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தார்.இந்நிலையில் தன் பொறுப்பில் இருந்த பகுதியில் கள்ளச்சந்தை மது விற்பனையைத் தடுக்கத் தவறிய காவல் ஆய்வாளர் மோகன்தாஸை பணியிடை நீக்கம் செய்து காவல் ஆணையர் உத்தரவிட்டுள்ளார்."இது போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தேவைப்பட்டால் குண்டர் சட்டத்தில் குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படுவார்கள்.சட்டவிரோத மது விற்பனையை தடுக்கத் தவறும் காவல் துறையினர் மீதும் பாரபட்சம் இன்றி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என காவல் ஆணையர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# சிபிஐ இயக்குநர் பதவி நீட்டிப்பு, நீட் வினாத்தாள் கசிவைக் கண்டித்து தமிழகம் முழுவதும் காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்

சென்னை:மே,17-

மத்திய அரசைக் கண்டித்து தமிழகம் முழுவதும் காங்கிரஸ் சார்பில் இன்று ஆர்ப்பாட்டம் நடக்கிறது.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: சிபிஐ இயக்குநர் பிரவீன் சூட்டின் பதவிக்காலத்தை நீட்டிப்பதற்காக நடைபெற்ற தேர்வுக் குழு கூட்டத்தில், முறையான முழுப் பட்டியலை வழங்காமல் பிரதமர் மோடியின் விருப்பத்திற்காக ஒருதலைப்பட்சமாக முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அரசியல் உள்நோக்கத்துடன் இந்த பதவி நீட்டிப்பு வழங்கப்பட்டிருப்பது அப்பட்டமான ஜனநாயக



விரோதச் செயல். எதிர்க்கட்சிகளை ஒடுக்கவே சிபிஐயை மத்திய அரசு கைப்பாவையாகப் பயன்படுத்தி வருகிறது. மேலும், அண்மையில் நடைபெற்ற நீட் தேர்வு வினாத்தாள் கசிவு காரணமாக 22 லட்சம் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். தேசிய தேர்வு முகமை நீட் தேர்வை நடத்துவதில் முற்றிலும் தோல்வியடைந்துவிட்டது. மத்திய அரசின் இந்த சர்வாதிகாரப் போக்கைக் கண்டித்து 15ம் தேதி அனைத்து மாவட்டங்களிலும் காங்கிரஸ் சார்பில் போராட்டங்கள் நடைபெறும். சென்னையில் காலை 10.00 மணியளவில் தண்டையார்பேட்டை அஞ்சல் நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நான் கலந்து கொள்கிறேன். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பிரதமரின் வேண்டுகோளை மீறி வாகன ஊர்வலம்: பாஜக பிரமுகர் மீது ம.பி முதல்வர் நடவடிக்கை

புதுடெல்லி:மே,17-

எரிசக்தி பயன்பாட்டை மிச்சப்படுத்த வேண்டுமென்ற பிரதமர் நரேந்திர மோடியின் வேண்டுகோளை மீறி மத்தியப் பிரதேசத்தில் வாகன ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது. இதன் மீதான நடவடிக்கையாக சம்மந்தப்பட்ட பாஜக பிரமுகருக்கு அம்மாநில முதல்வர் மோகன் யாதவ் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

மேற்காசிய போரின் நெருக்கடி உலகம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. இந்த நெருக்கடியின் மத்தியில் பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் உயர்ந்துள்ளன. இந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்ட பிரதமர் மோடி, தங்க நகைகள் வாங்குவதைத் தள்ளிப்போடுமாறும், பெட்ரோல் மற்றும் டீசலை சிக்கனமாகப் பயன்படுத்துமாறும் வலியுறுத்தினார். இதை ஏற்று மத்திய அமைச்சர்கள் மற்றும்



பாஜக ஆளும் மாநில அரசுகள் தங்கள் வாகன பயன்பாட்டை குறைப்பது மற்றும் அத்தியாவசியமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தையும் கடைப்பிடிக்கத் துவங்கி உள்ளனர். இந்நிலையில், மத்தியப் பிரதேச மாநிலத்தின் பாஜக பிரமுகர் சவுபாக்ய சிங் தாக்கூர், பிரதமர் மோடியின் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டு, உஜ்ஜயினிலிருந்து போபாலுக்கு நூற்றுக்கணக்கான வாகனங்கள் கொண்ட ஒரு ஊர்வலத்தை வழிநடத்திச் சென்றார்.இவரை ம.பி முதல்வர் மோகன் யாதவ், அம்மாநிலப் பாடநூல் கழகத்தின் தலைவராக அமர்த்தி இருந்தார். இந்த பொறுப்பை ஏற்பதற்காக சவுபாக்ய சிங் தாக்கூர் சென்று கொண்டிருந்தார். இந்த காட்சிப்பதிவுகள் உடனான செய்தி ஊடகங்களில் வெளியானது. இதையடுத்து, முதலமைச்சர் மோகன் யாதவ் உத்தரவின் பேரில், சவுபாக்யா சிங்கிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

இதில், தேசிய நலன் சார்ந்த வேண்டுகோளைப் புறக்கணித்ததற்காவும், அரசின் வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றாததற்காகவும் விளக்கம் கேட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சவுபாக்யா சிங்கிற்கு பல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. ம.பி அரசின் பாடநூல் கழகத்தின் அலுவலகம் அல்லது வளாகத்திற்குள் சவுபாக்ய சிங் நுழைவதற்கு, மறு உத்தரவு வரும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. கழகத்திற்குச் சொந்தமான எந்தவொரு வசதியையும், வாகனத்தையும், ஊழியரையும் அல்லது அலுவலகத்தையும் அவர் பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத்துடன் அவர், கழகம் தொடர்பான எந்தவொரு கூட்டத்திலும் பங்கேற்கவோ அல்லது தலைமை தாங்கவோ முடியாது. கழகத்தின் நிர்வாகம் அல்லது நிதி சார்ந்த முடிவுகள் எதிலும் பங்கேற்பதோ அல்லது கையெழுத்திடுவதோ, மறு உத்தரவு வரும் வரை தடை செய்யப்பட்டுள்ளது. உ.பி.யில் வாகன ஊர்வலம்: இதனிடையே, உத்தரப்பிரதேசத்தில் பிரதமர் மோடியின் தொகுதியான வாராணாசியிலும் இதேபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றுள்ளது. இங்கு மாவட்ட பாஜக தலைவர் ஹன்ஸ்ராஜ் விஷ்வ கர்மா, உ.பி அமைச்சரவையில் புதிய உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரை வாராணாசியில் அவரது கட்சியின் ஆதரவாளர்கள் சுமார் 80 வாகனங்களுடன் வரவேற்றுள்ளனர். இதில், ஆக்கிரமிப்புகளை அகற்ற முதல்வர் யோகி அரசு பயன்படுத்தும் புல்டோசரும் இடம் பெற்றிருந்தது.

இதன் காட்சிப்பதிவை அமைச்சராகி விட்ட ஹன்ஸ்ராஜ் தன் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருந்தார். இதுவும் தற்போது கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகி விட்டது. இதை உ.பி காங்கிரஸின் தலைவர் அஜய்ராய் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் விமர்சித்துள்ளனர்.


# வீட்டில் இருந்து வேலை திட்டத்தால் ஒரே நாளில் ஒரு நகரில் 6 லட்சம் லிட்டர் பெட்ரோலை சேமிக்கலாம்

## முன்னணி நிறுவன சிஇஓ கருத்து

ஹைதராபாத்: மே,17-

ஹைதராபாத்தை சேர்ந்த அஸ்ட்ரோ வால்டாய்ஸ் ஸ்டார்ட்அப் நிறுவனத் தலைமை செயல் அதிகாரி ராதா கிருஷ்ண காவலூரு சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

எனது முந்தைய நிறுவனத்தின் ஊழியர்கள் சராசரியாக 15 கி.மீ. தொலைவு பயணம் செய்து அலுவலகத்துக்கு வந்தனர். பெரும்பாலானோர் இருசக்கர வாகனங்களை பயன்படுத்தினர். ஒரு மோட்டார் சைக்கிள் ஒரு லிட்டர் பெட்ரோலில் 45 கி.மீ. வரை செல்லும். இதன்படி 3 ஊழியர்களின் ஒரு வழி பயணத்துக்கு ஒரு லிட்டர் பெட்ரோல் தேவைப்படும்.ஹைதராபாத்தில் உள்ள மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் சுமார் 12,000 பேர் பணி




யாற்றுகின்றனர். அவர்கள் அலுவலகத்துக்கு செல்ல தினமும் 8,000 லிட்டர் பெட்ரோல் தேவைப்படுகிறது. ஹைதராபாத் முழுவதும் செயல்படும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் சுமார் 9 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர். அவர்கள் மோட்டார் வாகனங்களில் அலுவலகங்களுக்கு செல்ல தினசரி 6 லட்சம் லிட்டர் பெட்ரோல் தேவைப்படுகிறது. இவர்கள் அனைவரும் வீட்டில் இருந்து வேலை செய்தால் ஒரே நாளில் ஹைதராபாத் நகரில் 6 லட்சம் லிட்டர் பெட்ரோலை சேமிக்க முடியும்.நாடு முழுவதும் மோட்டார் வாகனங்களுக்கு தினசரி 58.1 கோடி லிட்டர் பெட்ரோல் தேவைப்படுகிறது. வீட்டில் இருந்து வேலை செய்யும் திட்டத்தால் பெருமளவு பெட்ரோலை சேமிக்க முடியும்.தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் வீட்டில் இருந்து வேலை செய்யும் திட்டம் அமல்படுத்தப்பட்டால் ஓராண்டில் ரூ.15,000 கோடிக்கும் அதிகமாக சேமிக்க முடியும். இதன் மூலம் ஓராண்டில் 1.8 பில்லியன் அமெரிக்க டாலர் அந்நியச் செலாவணியை சேமிக்க முடியும். பெட்ரோலும் மிச்சமாகும், நாடு முழுவதும் போக்குவரத்து நெரிசலும் கணிசமாகக் குறையும். இவ்வாறு ராதா கிருஷ்ண காவலூரு தெரிவித்துள்ளார்.

# ரூ.1 கோடி நஷ்டஈடு நோட்டீஸை திரும்பப் பெற பாஜக தேசிய தலைமையிடம் ஏஎன்எஸ் பிரசாத் கோரிக்கை

சென்னை:மே,17-

'பாஜகவின் நிர்வாக முறைகேடுகளை வெளிக்கொண்டுவர விரும்புகிறேன், தனக்கு எதிரான ரூ.1 கோடி நஷ்டஈடு அவதூறு நோட்டீஸைத் திரும்பப் பெறவேண்டும்' என்று பாஜக தேசிய தலைமையிடம் ஏ.என்.எஸ்.பிரசாத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து, பாஜக தேசிய அமைப்பு பொதுச் செயலாளர் பி.எல்.சந்தோஷுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தின் விவரம்: 'கட்சியின் நலன் மற்றும் ஒருமைப்பாட்டைக் கருத்தில்கொண்டு, வெளிப்படையாகச் சில ஆலோசனைகளையும் கருத்துகளையும் முன்வைத்ததே நான் செய்த ஒரே தவறு. எனது நிலைப்பாட்டில் பிழை இருப்பதாகக் கருதியிருந்தால், தலைமையே என்னிடம் விளக்கம் கேட்டிருக்கலாம். தமிழகம் முழுவதும் எனக்குக் கிடைத்து வரும் மக்கள் ஆதரவையும், நேர்மறையான ஊடக வெளிச்சத்தையும் கண்டு தனிப்பட்ட முறையில் பொறாமை கொண்ட திருப்பதி நாராயணன் போன்றவர்கள், தொடர்ந்து



என் மீது தவறான தகவல்களைப் பரப்பி என்னை ஓரங்கட்டும் சதியில் ஈடுபட்டுள்ளனர். மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய அமைச்சர் எல்.முருகன் ஆகியோர் எனக்கு எதிராகத் திட்டமிட்டு இத்தகைய நடவடிக்கைகளை எடுத்திருப்பது எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. நான் எந்தவொரு அதிகாரப்பூர்வமான பதவியையும் எதிர்பார்க்கவில்லை. அதேசமயம், நயினார் நாகேந்திரன் மற்றும் எல்.முருகன் ஆகியோர் அதிகாரத்தில் இருக்கும்வரை, நான் எந்தப் பொறுப்பையும் ஏற்கப்போவதில்லை. தமிழக பாஜகவில் ஒரு உண்மையான அடிப்படைத் தொண்டனாகத் தொடர்ந்து பணியாற்றுவதற்கு ஏற்ற, இணக்கமான சூழலை மட்டுமே நான் கோருகிறேன்.

தமிழக பாஜக சார்பில் எனக்கு எதிராக ரூ.1 கோடி நஷ்டஈடு கேட்டு அனுப்பப்பட்டுள்ள நோட்டீஸைத் திரும்பப் பெறுவதற்குத் தேசியத் தலைமை உடனடியாகத் தலையிட வேண்டும். என்னை மீண்டும் பாஜகவில் இணைத்துக் கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், தமிழக பாஜகவின் நலனைக் காக்கும் பொருட்டு, கடந்த தேர்தலுக்கு முன்பாக மாநில மற்றும் மாவட்ட அளவிலான நிர்வாகங்களில் நடைபெற்ற சில முறைகேடுகள் மற்றும் தேர்தல் நிதி தொடர்பான விவகாரங்களை, எவ்வித உள்நோக்கமும் இன்றி தேசியத் தலைமையின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்' என்று அதில் கூறப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் நகலை, பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின், மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கும் ஏ.என்.எஸ்.பிரசாத் அனுப்பி உள்ளார்.



# 5 நாள் நடந்த சுகப்பிரசவத்தில் உ.பி. பெண்ணுக்கு 4 குழந்தை

மொராதாபாத்:மே,17-

உத்தரபிரதேச மாநிலம் சம்பல் மாவட்டம் ஓவரி கிராமத்தைச் சேர்ந்தவர் அமீனா. இவர் பிரசவத்துக்காக லோதிப்பூரில் உள்ள தீர்த்தங்கர் மகாவீர் பல்கலைக்கழக மருத்துவமனையில் கடந்த 9ம் தேதி சேர்க்கப்பட்டார். கர்ப்ப காலத்தின்போது அவருக்கு ஸ்கேன் செய்து பார்த்ததில் அவரது வயிற்றில் 4 குழந்தைகள் இருப்பது தெரியவந்தது.

அதனால் மருத்துவர்கள் அதிக எச்சரிக்கையுடன் அவருக்கு பிரசவம் பார்த்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதல் நாள் இரவே அவருக்கு முதல் குழந்தை சுகப்பிரசவத்தில் பிறந்தது.

அமீனாவுக்கு உடல்நிலை பாதிப்படைந்து இருந்ததால் அவருக்கு சிசேரியன் சிகிச்சையை மருத்துவர்கள் மேற்கொள்ளவில்லை. அவர் தொடர்ந்து கண்காணிப்பில் வைக்கப்பட்டார். இந்நிலையில் கடந்த 14ம் தேதி மேலும் 3 குழந்தைகளை சுகப்பிரசவத்தில் அவர் பெற்றெடுத்தார். அதாவது 5 நாட்களாக நடந்த சுகப்பிரசவத்தில் 4 குழந்தைகளை அவர் பெற்றெடுத்தார். தற்போது தாயும், 4 குழந்தைகளும் நலமாக உள்ளனர். இதில் 2 குழந்தைகள் ஆண், 2 குழந்தைகள் பெண்.

இதுகுறித்து அமீனாவுக்கு பிரசவம் பார்த்த மருத்துவக் குழுவின் தலைவர் டாக்டர் ஷுப்ரா அகர்வால் கூறும்போது, "இந்த மருத்துவமனையில் ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள் சுகப்பிரசவத்தில் பிறந்தது இதுவே முதல்முறை. அதிக ரிஸ்க் இருந்தபோதும் அவரை அதிக கவனத்துடன் சிகிச்சை அளித்து குழந்தைகளை சுகப்பிரசவத்திலேயே பெறச் செய்தோம். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 4 குழந்தைகளும் வென்டிலேட்டரில் வைக்கப்பட்டுள்ளன'' என்றார்.

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்க அமெரிக்காவிடம் பணியும் அரசு

## காங்கிரஸ் கடும் தாக்கு

புதுடெல்லி:மே,17-

ஈரான் மற்றும் ரஷ்யாவிடம் இருந்து இந்தியா எரிபொருள் வாங்க அமெரிக்கா அளித்த கெடு இன்றுடன் முடிகிறது. இதுதொடர்பாக காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:இந்தியாவின் இறையாண்மை மற்றும் எரிசக்திப் பாதுகாப்பை பிரதமர் மோடி தலைமையிலான அரசு சமரசம் செய்து கொண்டுள்ளது. நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பு விவகாரத்தில் அமெரிக்காவுக்கு முன் மோடி அரசு பணிந்து போனதற்கான விலையை, பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு ஆகியவற்றின் கடுமையான தட்டுப்பாடுகள் வாயிலாக ஒட்டுமொத்த தேசமும் இன்று கொடுத்துக் கொண்டிருக்கிறது.முதலாவதாக, அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில், ரஷ்யாவிடமிருந்து மலிவு விலையில் கச்சா எண்ணெய் வாங்குவதை பிரதமர் மோடி அரசு நிறுத்தியது. பின்னர், போர் நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதற்கு அமெரிக்கா, இந்தியாவுக்கு ஒரு மாதம் விலக்கு அளித்தது.இந்த விவகாரத்தில் நாட்டின் நலனை முன்னிறுத்தித் தானே ஒரு முடிவை எடுப்பதற்குப் பதிலாக, பிரதமர் மோடி அரசு அமெரிக்க அதிபர் ட்ரம்பிடம் பணிந்துபோய், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதற்கு மீண்டும் அனுமதி கோரி கெஞ்சிக் கொண்டிருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது. இவ்வாறு காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

# சார் தாம் யாத்திரை 1 மாதத்தில் 12 லட்சம் பக்தர்கள் தரிசனம்



டேராடூன்: மே.17- உத்தராகண்ட் மாநிலத்தில் அமைந்துள்ள புனிதத் தலங்களான பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி மற்றும் யமுனோத்ரி ஆகிய சார் தாம் ஆலயங்களுக்கு இந்த ஆண்டு முன்னெப்போதும் இல்லாத வகையில் பக்தர்களின் வருகை அதிகரித்துள்ளது. நடை திறக்கப்பட்ட ஒரே மாதத்திற்குள் 12.62 லட்சம் பக்தர்கள் தரிசனம் செய்து புதிய சாதனையைப் படைத்துள்ளனர்.தற்போது நாளொன்றுக்கு சுமார் 70,000 முதல் 80,000 பக்தர்கள் மலைக் கோயில்களுக்கு வருகை தருகின்றனர். இந்த யாத்திரையின் போது இதுவரை 40 பக்தர்கள் உயிரிழந்துள்ளனர். இவை அனைத்தும் மாரடைப்பு உள்ளிட்ட காரணங்களால் நிகழ்ந்தவை.இந்த ஆண்டு முதல் முறையாக பத்ரிநாத், கேதார்நாத் மற்றும் கங்கோத்ரி ஆகிய 3 ஆலயங்களுக்குள் இந்துக்கள் அல்லாதோர் நுழைவதற்கு சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. மாற்று மதத்தினர் ஆலயத்திற்குள் நுழைய விரும்பினால், அவர்கள் சனாதன தர்மத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளதாக உறுதிமொழிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் என பத்ரிநாத்கேதார்நாத் கோயில் நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு சார் தாம் யாத்திரையில் மொத்தம் 50 லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டனர். இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆந்திராவில் ரூ.15,803 கோடி செலவில் போர் விமானங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை: மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங், சந்திரபாபு நாயுடு அடிக்கல்




புட்டபர்த்தி: மே.17- ஆந்திர மாநிலம், சத்ய சாய் மாவட்டம், புட்டபர்த்தியில், நேற்று காலை மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் மேம்பட்ட நடுத்தர போர் விமான தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டினர்.

அப்போது சந்திரபாபு நாயுடு பேசியதாவது: புட்டபர்த்தியில் 650 ஏக்கரில் ரூ.15,803 கோடி செலவில் போர் விமானங்கள் தயாரிப்பு தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.1 லட்சம் கோடி முதலீடுகள் ஆந்திராவுக்கு வர உள்ளன. இனி ராயலசீமா மாவட்டங்கள் வறண்ட மாவட்டங்கள் அல்ல. பணம் கொழிக்கும் மாவட்டங்களாக மாறும். கடப்பா இரும்பு தொழிற்சாலை பணிகள் ஜூன் மாதம் தொடங்கி 2028க்குள் முடிவடையும். நாட்டிற்கே ஆந்திரா ஒரு பாதுகாப்பு கவசமாக மாற உள்ளது.ஒரு காலத்தில் தங்கம் என்றாலே கேஜிஎஃப். ஆனால் இப்போது தங்கம் என்றால் ஆந்திராவில் உள்ள ஜொன்னகிரி கோல்ட் ஃபீல்ட் ஆகும். இந்த ஆண்டில் இங்கு 600 கிலோ தங்கமும், அடுத்த ஆண்டு முதல் 1500 கிலோ தங்கமும் உற்பத்தி செய்யப்படும். தங்க உற்பத்தியில் ஆந்திரா புரட்சியை ஏற்படுத்தும். இவ்வாறு சந்திரபாபு நாயுடு பேசினார்.

விழாவில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது: ஆந்திராவில் கர்னூலில் 8 ட்ரோன் நிறுவனங்கள் இணைந்து செயல்பட போகின்றன. வருவாய், மருத்துவம், விவசாய துறைகளுக்கு கூட ட்ரோன் மிகவும் உதவிகரமாக இருக்கும். ஒரு கால கட்டத்தில் பாதுகாப்பு துறை சம்பந்தப்பட்ட வகையில், வெளிநாடுகளில் இருந்து அதிகமாக பாதுகாப்பு உபகரணங்களை இறக்குமதி செய்வதில் இந்தியா முதலிடத்தில் இருந்தது. ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறியுள்ளது. அனைத்தும் நாமே தயாரித்து கொள்கிறோம். 2004ல் ரூ.46 ஆயிரம் கோடி மதிப்புள்ள போர் சம்பந்தப்பட்ட ஆயுத தயாரிப்பு மையங்கள் மட்டுமே நம்மிடம் இருந்தன. ஆனால் இப்போது ரூ.1.75 லட்சம் கோடி மதிப்பில் ஆயுத தயாரிப்பு மையங்கள் உள்ளன என்பதில் நாம் பெருமை கொள்வோம். இவ்வாறு ராஜ்நாத் சிங் பேசினார்.

இவ்விழாவில், மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு, ஆந்திர மாநில அமைச்சர்கள் லோகேஷ், சத்யபிரசாத், பரத், சத்யகுமார் யாதவ் ஆகியோரும் பங்கேற்றனர்.

## தமிழகத்தில் 13 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

# முதல்வர் பாதுகாப்பு பிரிவு டிஐஜியாக தர்மராஜன் நியமனம்




சென்னை:மே,17- தமிழகத்தில் 13 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். முதல்வரின் பாதுகாப்பு பிரிவு டிஐஜியாக தர்மராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஐஏஎஸ் அதிகாரிகள் நிலையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டன. இதன் தொடர்ச்சியாக ஐபிஎஸ் அதிகாரிகள் நிலையிலும் மாற்றங்கள் நடந்து வருகின்றன. முதல் கட்டமாக, உளவுத் துறை ஐ.ஜி.யாக அஸ்ரா கார்க் நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், தமிழகத்தில் மேலும் 10 ஐபிஎஸ் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து உள்துறைச் செயலர் மணிவாசன் நேற்று உத்தரவிட்டுள்ளார். அதன்படி, உளவுத் துறை டிஐஜியாக இருந்த பால நாகதேவி, சைபர் க்ரைம் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளார். இதையடுத்து, உளவுத் துறை தலைமை அதிகாரியாக அஸ்ரா கார்க் செயல்பட உள்ளார்.

மேலும், முதல்வர் விஜய்யின் பாதுகாப்பு பிரிவு டிஐஜியாக ஜி.தர்மராஜன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னதாக, வேலூர் சரக டிஐஜியாக பணியாற்றினார். இதேபோல, தென் சென்னை காவல் இணை ஆணையர் பாகொலா சிபாஸ் கல்யாண் உளவுத் துறை (உள்நாட்டு பாதுகாப்பு) டிஐஜியாகவும், திருநெல்வேலி சரக டிஐஜி சரவணன், உளவுத் துறை (சிஐடி) டிஐஜியாகவும், திருவாரூர் மாவட்ட எஸ்.பி. கருண் உத்தவ் ராவ், ஒருங்கிணைந்த குற்ற உளவுப் பிரிவு எஸ்.பி.யாகவும், தென்காசி மாவட்ட எஸ்.பி. மயில்வாகனன், எஸ்பிசிஐடி (1) எஸ்.பி. யாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.தூத்துக்குடி எஸ்.பி. மதன், எஸ்பிசிஐடி (1) எஸ்.பி.யாகவும், க்யூ பிரிவு சிஐடி எஸ்.பி. சண்முகம், எஸ்பிசிஐடி (2) எஸ்.பி.யாகவும், சென்னை மெட்ரோ மண்டல க்ரைம் பிரிவு சிஐடி ஜி.எஸ்.மாதவன், எஸ்பிசிஐடி (2) எஸ்.பி. யாகவும், மாநில சட்டம் ஒழுங்கு உதவி ஐ.ஜி. சிலம்பரசன், சிறப்பு டிவிஷன் எஸ்பிசிஐடி பிரிவு எஸ்.பி.யாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த டிஜிபி டேவிட்சன் தேவாசிர்வாதம், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின் (ஆவின்) தலைமை ஊழல் தடுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அங்கிருந்த டிஜிபி ராஜீவ்குமார், சென்னை அடுத்த ஊனமாஞ்சேரியில் உள்ள காவல் உயர் பயிற்சியக டிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார். காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டிருந்த ஐ.ஜி. செந்தில் வேலன், ஊனமாஞ்சேரியில் உள்ள காவல் உயர் பயிற்சியக கூடுதல் இயக்குநராக பணியமர்த்தப்பட்டுள்ளார்.

# சர்ச்சைக்குரிய போஜ்சாலா வளாகம் சரஸ்வதி தேவிக்கான கோயில்தான்

## மத்திய பிரதேச உயர் நீதிமன்ற அமர்வு தீர்ப்பு



போபால்:மே,17- மத்திய பிரதேசத்தின் தார் மாவட்டத்தில் 11ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட போஜ்சாலா வளாகம் உள்ளது. இது சரஸ்வதி தேவி கோயில் என்று இந்துக்கள் வாதிடுகின்றனர். அதேசமயம் அது கமல் மவுலா மசூதி என்று முஸ்லிம்கள் நம்புகின்றனர். இதனால் ஏற்பட்ட சர்ச்சையை தொடர்ந்து அங்கு கடந்த 2003ல் இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய இரு தரப்பினரையும் குறிப்பிட்ட நாட்களில் குறிப்பிட்ட நேரத்தில் வழிபட ஏஎஸ்ஐ அனுமதி அளித்தது.

இதுதொடர்பான வழக்கில் ம.பி. உயர் நீதிமன்ற நீதிபதிகள் விஜய் குமார் சுக்லா, அலோக் அவஸ்தி ஆகியோர் அடங்கிய அமர்வு நேற்று தீர்ப்பு அளித்தது. நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் கூறியிருப்பதாவது: வரலாற்று இலக்கியங்களும் ஆவணங்களும், சர்ச்சைக்குரிய பகுதியின் இயல்பு பார்மர் வம்சத்தை சேர்ந்த மன்னர் போஜருடன் தொடர்புடைய ஒரு சமஸ்கிருத கற்றல் மையமான போஜசாலையாகவே இருந்ததை நிலைநாட்டுகின்றன.மேலும் போஜர் காலத்துடன் தொடர்புடைய பல்வேறு இலக்கிய மற்றும் கட்டிடக்கலை குறிப்புகள், அங்கு சரஸ்வதி தேவி கோயில் இருந்ததை சுட்டிக்காட்டுகின்றன. எனவே, அது சரஸ்வதி கோயில்தான். லண்டன் அருங்காட்சியகத்தில் உள்ள சரஸ்வதி தேவி சிலையை மீட்டு கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மசூதி கட்டுவதற்கு வேறு நிலம் ஒதுக்க மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

இந்த தீர்ப்பு குறித்து வழக்கறிஞர் விஷ்ணு சங்கர் ஜெயின் கூறுகையில், ''ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வந்துள்ளது. இந்து தரப்பினருக்கு வழிபடும் உரிமையை நீதிமன்றம் வழங்கியுள்ளது. இனிமேல், அங்கு இந்து வழிபாடு மட்டுமே நடைபெறும்'' என்றார்.இந்த தீர்ப்பை தொடர்ந்து தார் மாவட்டத்தில் காவல் துறை பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது. மக்கள் அமைதி காக்க வேண்டும், வதந்தி அல்லது தவறான தகவல்களை பரப்புவதை தவிர்க்க வேண்டும் என தார் மாவட்ட ஆட்சியர் ராஜீவ் ரஞ்சன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஐஎஸ்ஐஎஸ் இரண்டாம் நிலை தளபதி ஆப்பிரிக்காவில் கொலை

## ட்ரம்ப்



வாஷிங்டன்மே,17- 'அமெரிக்க ராணுவம், நைஜீரிய ஆயுதப் படைகளுடன் இணைந்து செயல்பட்டு, உலகளாவிய பயங்கரவாத அமைப்பான ஐஎஸ்ஐஎஸ்ஸின் இரண்டாம் நிலைத் தளபதி கொல்லப்பட்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார்.இதுகுறித்து சமூக வலைதளத்தில் டொனால்டு ட்ரம்ப் வெளியிட்ட பதிவில், "இன்று இரவு, எனது நேரடி உத்தரவின் பேரில், துணிச்சலான அமெரிக்கப் படைகளும் நைஜீரிய ஆயுதப் படைகளும் இணைந்து, உலகின் மிகவும் தீவிரமான பயங்கரவாதியை போர்க்களத்திலிருந்து அகற்றுவதற்கான, மிக துல்லியமாக திட்டமிடப்பட்ட மற்றும் மிகவும் சிக்கலான ஒரு பணியை சிறப்பாக நிறைவேற்றின.உலக அளவில் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் இரண்டாம் நிலைத் தளபதியான அபு பிலால் அல்மினுகி, ஆப்பிரிக்காவில் தன்னால் பதுங்கிக்கொள்ள முடியும் என்று நினைத்தார்; ஆனால் அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது குறித்த தகவல்களை தொடர்ந்து அளிக்கும் உளவாளிகள் எங்களிடம் இருப்பதை அவர் அறியவில்லை.அவர் இனி ஆப்பிரிக்க மக்களை அச்சுறுத்தவோ அல்லது அமெரிக்கர்களை இலக்காகக் கொண்ட தாக்குதல் நடவடிக்கைகளைத் திட்டமிடவோ உதவ மாட்டார். அவர் கொல்லப்பட்டதன் மூலம், ஐஎஸ்ஐஎஸ் அமைப்பின் உலகளாவிய செயல்பாடுகள் பெருமளவில் முடங்கியுள்ளன. இந்த நடவடிக்கையில் எங்களுடன் இணைந்து செயல்பட்டதற்காக நைஜீரிய அரசாங்கத்திற்கு நன்றி. கடவுள் அமெரிக்காவை ஆசீர்வதிக்கட்டும்,'' என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜூன் 2023ல் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜோ பைடனின் அரசு, அபுபிலால் அல்மினுகியை 'உலகளாவிய பயங்கரவாதி' என்று அறிவித்தது. அபுபக்கர் மைனோக் மற்றும் அபோர் மைனோக் உள்ளிட்ட பல புனைப்பெயர்களைக் கொண்டு இவர் செயல்பட்டு வந்தார்

# ஆயுதப்படை தலைமையகத்தில் அலுவலக உதவியாளரை தாக்கிய பெண் டிஐஜி

## விசாரணை நடத்தி அறிக்கை தர உத்தரவு



சென்னை: மே,17- சென்னையில் இயங்கி வரும் ஆயுதப்படை தலைமையகத்தில் அலுவலக உதவியாளரை பெண் டிஐஜி தாக்கியதாகக் கூறப்படும் விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.தமிழக காவல் துறையில் பல்வேறு பிரிவுகள் உள்ளன. அதில் முக்கியமான பிரிவுகளில் ஒன்று ஆயுதப்படை. கலவரம், அசாதாரண சூழல் அல்லது வன்முறை ஏற்படும் நேரங்களில் அவற்றை ஒடுக்க இந்த படை பயன்படுத்தப்படுகிறது.மேலும், விஐபிக்கள் வருகை, திருவிழாக்கள், பண்டிகைகள் மற்றும் பெரிய பொதுக் கூட்டங்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், கைதிகளை சிறையிலிருந்து நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லுதல், சட்டம்ஒழுங்கு பணியில் போலீஸாருக்கு உதவியாக செயல்படுதல் உட்பட பல்வேறு பணிகளை ஆயுதப்படை பிரிவு போலீஸார் மேற்கொள்கின்றனர். இப்பிரிவின் தலைமை அலுவலகம் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ளது.இங்கு டிஐஜியாக பெண் ஐபிஎஸ் அதிகாரி ஒருவர் உள்ளார். அவர் மன அழுத்தத்துக்கு சிகிச்சை பெற்றதாக கூறப்படுகிறது. மேலும் உடல் நலமும் பாதிக்கப்பட்டிருந்தார். இதனால் அவரை போலீஸ் உயர் அதிகாரிகள் மிக முக்கியப் பணிகளில் அமர்த்தாமல் ஆயுதப்படைப் பிரிவில் பணியாற்ற அறிவுறுத்தியதாக கூறப்படுகிறது.கோப்புகளை வீசிஇவர் பணியில் இருந்தபோது, கோப்பில் கையெழுத்து வாங்க வந்த அலுவலக ஆண் உதவியாளர் (அமைச்சுப் பணியாளர்) ஒருவரது செயல் பெண் டிஐஜிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியதாம். இதனால், கோபம் அடைந்த பெண் டிஐஜி, அலுவலக உதவியாளர் மீது கோப்புகளை வீசி எறிந்ததாகவும், காலணியால் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து அந்த அலுவலக உதவியாளர் அவரது சங்க நிர்வாகிகளிடம் முறையிட்டுள்ளார். இந்நிலையில் சம்பந்தப்பட்ட பெண் ஐபிஎஸ் அதிகாரி, டிஜிபியிடம் இந்த விவகாரம் தொடர்பாக மனு அளித்துள்ளார்.

இது தொடர்பாக விரிவான விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய டிஜிபி மற்றும் சென்னை காவல் ஆணையர் தனித்தனியாக உத்தரவிட்டுள்ளனர். இதை அடிப்படையாக வைத்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

# வானிலை முன்னறிவிப்பு: கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு



சென்னை:மே,17- தமிழகத்தில் தேனி, மதுரை, கோவை, திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மே 18ம் தேதி இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் வி.ஆர்.துரை வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழகத்தில் ஒரு சில இடங்களில் (வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும்) மழை பெய்துள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் மிதமானது முதல் கனமழை பெய்துள்ளது.

கடந்த 24 மணி நேர நிலவரப்படி, செங்கல்பட்டு மாவட்டம் நியூ சென்னை டவுன்ஷிப்பில் 5 செ.மீ., திருநெல்வேலி மாவட்டம் ஊத்துவில் 4 செ.மீ., கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையத்தில் 3 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, சனிக்கிழமை காலை காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக அதே பகுதிகளில் நிலவியது. இதன் காரணமாக, ராமநாதபுரம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய 3 மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.

மே 17ம் தேதி தேனி, திண்டுக்கல், மதுரை கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய 5 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை இடியுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும்.மே 18, 19, 21, 22 ஆகிய தேதிகளில், தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், மே 20ம் தேதி ஓரிரு இடங்களிலும் மிதமான மழை பெய்யக்கூடும்.மே 18ம் தேதி தேனி, திண்டுக்கல், மதுரை கோயம்புத்தூர், நீலகிரி, சிவகங்கை, கரூர், திருச்சிராப்பள்ளி ஆகிய 8 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.மே 19ம் தேதி திண்டுக்கல், தேனி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய 4 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்றும், நாளையும் (மே 16, 17) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.தென்மேற்கு பருவமழை:தென்மேற்கு பருவமழை தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளிலும், தென்மேற்கு மற்றும் தென்கிழக்கு வங்கக்கடலின் சில பகுதிகளிலும், அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் நிகோபார் தீவுகளிலும், ஸ்ரீ விஜயபுரம் உட்பட அந்தமான் தீவுகளின் சில பகுதிகளிலும் சனிக்கிழமை (மே 16) தொடங்கியது. கேரளப்பகுதிகளில் தென் மேற்கு பருவமழை மே 26ம் தேதி தொடங்கும்.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:தென் தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், தெற்கு வங்கக்கடல், மத்திய கிழக்கு வங்கக்கடல், மத்திய மேற்கு வங்கக்கடல், ஆந்திர கடலோரப்பகுதி, கேரள கர்நாடகா கடலோரப்பகுதி, லட்சத்தீவுகளில் மே 20ம் தேதி வரை பலத்த சூறாவளி காற்று வீசும். எனவே, இப்பகுதிகளுக்கு மேற்படி நாட்களில் செல்ல வேண்டாம் என்று மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது



## குடிமங்கலம் மேற்கு ஒன்றியத்தில் திமுக எம்.எல்.ஏ ஜெயக்குமார் வீதி வீதியாகச் சென்று நன்றி அறிவிப்பு

உடுமலை மே,17-
திருப்பூர் மாவட்டம் உடுமலை சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற திமுக மு.ஜெயக்குமார் எம்.எல்.ஏ, குடிமங்கலம் மேற்கு ஒன்றியப் பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களித்த பொதுமக்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி தலைமையில், குடிமங்கலம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அடிவள்ளி முரளி முன்னிலையில் இந்த நன்றி அறிவிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் அவைத் தலைவர் ஜெயபால், பொதுக்குழு உறுப்பினர் யு.என்.பி.குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஷாம்பிரசாத், புக்களம் சாந்தகுமார், முருகேஷ், பாசன சபை பொறுப்பாளர் நித்தியநந்தன், முன்னாள் ஊராட்சித் தலைவர் தினேஷ், முன்னாள் கவுன்சிலர் திவ்யா சுரேஷ், புஷ்பராஜ், இளைஞர் அணி அமைப்பாளர் பிரகாஷ், விஜய் கண்ணா மற்றும் கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## அன்புக்கரங்கள் குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள், அசைவ விருந்து! செல்லத்துரை பிறந்தநாளை விழாவாக மாற்றிய கடையநல்லூர் திமுக

கடையநல்லூர் மே,17-
கடையநல்லூரில் திமுக முன்னாள் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செல்லத்துரை பிறந்தநாளை முன்னிட்டு, நகர, ஒன்றிய திமுக மற்றும் பல்வேறு அணிகள் சார்பில் பிரம்மாண்ட நலத்திட்ட உதவிகள் மற்றும் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

கிழக்கு ஒன்றிய செயலாளர் சுரேஷ் ஏற்பாட்டில் மங்களபுரம் சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. கிழக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் வள்ளியம்மாள்புரம் முத்துக்குமார் ஏற்பாட்டில் சிவராமபேட்டை கற்பக விநாயகர் கோவிலில் 250 பேருக்கு உணவு வழங்கப்பட்டது. தெற்கு ஒன்றியம் குலையனேரியில் கிளை



செயலாளர் செல்வக்குமார் ஏற்பாட்டில் 500 பீடி சுற்றும் பெண்களுக்கு தட்டு, டப்பு, அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. செல்லத்துரை அலுவலகத்தில் 500 பேருக்கு அசைவ விருந்து வழங்கப்பட்டது.

*மெகா கேக் கொண்டாட்டம்:*
மாலையில் மணிக்கூண்டு முன்பு தெற்கு நகர பொறுப்பாளர் இத்தாலியன் பீரப்பா ஏற்பாட்டில், தி.மு.ராசேந்திரன் எம்.எல்.ஏ தலைமையில், நகர செயலாளர் அப்பாஸ் முன்னிலையில் 30 கிலோ கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. இரவில் மாவட்ட இளைஞரணி ஐவேந்திரன் தினேஷ் ஏற்பாட்டில் வேலாயுதபுரம் அன்புக்கரங்கள் இல்ல குழந்தைகளுக்கு அசைவ விருந்து வழங்கப்பட்டது.

மதிமுக மாவட்ட செயலாளர் சுதா பாலசுப்பிரமணியன், நகர செயலாளர் முருகன், வக்கீல் சுப்பையா, திமுக பேரூர் செயலாளர்கள் ராஜராஜன், தங்கப்பா, வெள்ளத்துரை, ஒன்றிய கவுன்சிலர்கள் பகவதியப்பன், அருணாசலபாண்டியன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் முருகன், நகர இளைஞரணி கே.ஆர். யாசின், அறங்காவலர் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் கவுன்சிலர்கள் சிட்டி திவான்மைதீன், மாலதி, பூரணசந்திரன், மயில்சாமி, காசிநாடார், நவீன், சீவநல்லூர் சரவணன், முத்துலட்சுமி, கிளை செயலாளர்கள் கருப்பசாமி, கொத்தாலகுமார், கணேசன், தங்கம், பிள்ளையார்பாண்டியன், சுப்பிரமணியன், தங்கபாண்டியன், ராஜ், மாரியப்பன், செல்வராஜ், சங்கரன், நல்லையா, அருள்செல்வன், பேச்சாளர் சாகுல்ஹமீது மற்றும் நகர நிர்வாகிகள் பெட்டி முருகையா, மசூது, ஹாலித், ராஜா உட்பட பலர் திரளாகப் பங்கேற்றனர்.



■ கம்பம் அரசு மருத்துவமனையில் கம்பம் சட்டமன்ற உறுப்பினர் பி.எல்.ஏ. ஜெகநாத் மிஸ்ரா திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மருத்துவமனையின் தரம் மற்றும் சிகிச்சை முறைகள் குறித்து மருத்துவர்களிடமும், உள் நோயாளிகளிடமும் கேட்டறிந்த அவர், பொதுமக்களுக்கு எவ்வித தொய்வுமின்றி நல்ல முறையில் மருத்துவச் சேவை வழங்க வேண்டும் என மருத்துவர்களைக் கேட்டுக்கொண்டார்.



## மாணவர்களின் எதிர்காலத்தை சீரழிக்கும் கும்பல்! புளியங்குடியில் 17 கிலோ புகையிலையுடன் பெட்டிக்கடை உரிமையாளர் கைது

புளியங்குடி மே,17-
தென்காசி மாவட்டம் புளியங்குடி பகுதியில் பள்ளி, கல்லூரி மாணவர்களைக் குறிவைத்துத் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாகப் போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் புளியங்குடி போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, அவ்வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த நபரைக் காவலில் எடுத்துச் சோதனையிட்டனர். அதில் அவரிடம் தடை செய்யப்பட்ட புகையிலைப் பாக்கெட்டுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

விசாரணையில், அவர் புளியங்குடி பகுதியைச் சேர்ந்த சீதாராமன் மகன் முனியசாமி (29) என்பதும், அப்பகுதியில் பெட்டிக்கடை நடத்தி வருவதும் தெரியவந்தது. இவர் வடமாநிலத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்து புகையிலைப் பொருட்களைக் குறைந்த விலைக்கு வாங்கி வந்து, பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களைக் குறிவைத்து விற்பனை செய்து வந்துள்ளார். அவரிடமிருந்து விற்பனைக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 17 கிலோ புகையிலைப் பொருட்கள், 11,500 ரூபாய் ரொக்கப் பணம் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்திய இருசக்கர வாகனம் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். முனியசாமி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.




■ ராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ்கே. கிறிஸ்டோபர், திருநெல்வேலி காவல் கண்காணிப்பாளர் பிரசன்ன குமாரை மரியாதை நிமித்தமாக சந்தித்தபோது, அருகில் தமிழக வெற்றிக் கழக மாவட்டச் செயலாளர் ராஜகோபால்.



■ தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராமசாமியாபும் ஊராட்சிக்குட்பட்ட இந்திரா நகர் இந்திரபேரி பகுதியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., ஊரகவளர்ச்சித்துறையின் சார்பில், முதலமைச்சரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் (20262027) இன் கீழ் ரூ.95.05 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை அமைக்கப்பட்டுள்ள பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ தலைமைச் செயலகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் புதிய இயக்குநராக மரு. அ. அருண் தம்புராஜ், இ.ஆ.ப., பொறுப்பேற்றுக் கொண்டார். அரசின் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளை மக்களிடம் திறம்பட கொண்டு செல்லும் முக்கிய பொறுப்பை அவர் ஏற்றுள்ளார். நிகழ்வில் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

## நட்சத்திர ஓட்டல்களில் 'கள்' விற்பனை செய்ய திட்டம்: தெலங்கானா அமைச்சர் தகவல்

ஹைதராபாத்:மே,17-
ஹைதராபாத்தில் உள்ள நட்சத்திர ஓட்டல்களில் 'கள்' விற்க நடவடிக்கை எடுப்போம் என தெலங்கானா மாநில அமைச்சர் பொன்னம் பிரபாகர் அறிவித்துள்ளார்.



தெலங்கானா மாநில போக்குவரத்து மற்றும் பிசி நலச் சங்க துறை அமைச்சர் பொன்னம் பிரபாகர் ஹைதராபாத்தில் நேற்று அளித்த பேட்டியில் கூறியதாவது: தெலங்கானா கலாச்சாரத்தை வெளி உலகிற்கு தெரியப்படுத்தும் வகையில், இனி 'கள்', நீரா (பதநீர்) போன்றவற்றின் விற்பனை ஊக்குவிக்கப்படும். இதற்கான தீவிர முயற்சியில் அரசு உள்ளது. தோட்டக்கலை பண்ணைகளில் கூட ஈச்சம், பனை கன்றுகள் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

ஹைதராபாத்தில் உள்ள 5 நட்சத்திர ஓட்டல்களில் கூட 'கள்', நீரா போன்றவை விற்க நடவடிக்கை எடுக்கப்படும். கள் இறக்கும் கூலி தொழிலாளர்கள் நலனுக்காக இந்த அரசு பல திட்டங்களை செயல்படுத்தும். வரும் 24ம் தேதி எக்ஸ்பீரியம் பார்க்கில் 'பனை மேளா' நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. அங்கு 250 வகையிலான பனை மரங்கள் நடப்பட்டுள்ளன. அவைகளை மக்கள் கண்டு ரசிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.



■ ஈரோடு தந்தை பெரியார் அரசு மருத்துவமனையில், ம.விஜய் பாலாஜி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினராக பதவியேற்ற பின், முதன்முறையாக மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



## சோழவந்தான் எம்.எல்.ஏ கருப்பையாவுக்கு அலங்காநல்லூரில் தவெகவினர் உற்சாக வரவேற்பு

அலங்காநல்லூர் மே,17-
மதுரை மாவட்டம் சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா அவர்கள், சென்னையிலிருந்து திரும்பியதை அடுத்து அலங்காநல்லூர் ஸ்ரீ முனியாண்டி கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார். முன்னதாக சென்னை பயணத்தை முடித்து வந்த அவருக்கு, தவெக மதுரை மாநகர் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மாநகர் வடக்கு மாவட்டச் செயலாளருமான விஜய் அன்பன், கல்லானை, மற்றும் புறநகர் மாவட்டச் செயலாளர் விஷால்கிருஷ்ணா ஆகியோர் தலைமையிலும், அலங்காநல்லூர் ஒன்றியச் செயலாளர் விஜய்ஹரிஷ், நகரச் செயலாளர் தளபதி ரஞ்சித் ஆகியோர் முன்னிலையிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அலங்காநல்லூர் முனியாண்டி கோவிலில் நிர்வாகிகளுடன் இணைந்து தரிசனம் செய்த எம்.எல்.ஏ கருப்பையா, பின்னர் தனது சொந்த ஊரான வாவிடமருதூர் கிராமத்திற்குச் சென்றார். அங்கு அவருக்கு மேளதாளங்கள் முழங்க, பட்டாசு வெடித்து, பெண்கள் ஆரத்தி எடுத்து பிரம்மாண்ட வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து கிராமத்திற்குப் பாத்தியப்பட்ட கோவில்களிலும் அவர் சுவாமி தரிசனம் செய்தார்.

இந்த நிகழ்வின் போது காங்கிரஸ் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் நேரில் சந்தித்து அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர். நிகழ்வில் மேற்கு ஒன்றியச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, இணைச் செயலாளர்கள் முத்து, ராமநாதன், வடக்கு ஒன்றிய நிர்வாகிகள் தனசேகர், கார்த்திக், வாடிப்பட்டி தாமு உட்பட கட்சி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் திரளாகக் கலந்துகொண்டனர்.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், 12ம் ஆம் பொதுத்தேர்வில் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளில், மதுரை மாவட்ட அளவில் முதல் மதிப்பெண்கள் பெற்ற மூன்று மாணவிகளுக்கு கேடயம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வழங்கினார்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000